# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.2 of 2025**

(Spl.C.C.No.4 of 2020 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.15 (L.W.26)

| | |
|---|---|
| Name | அசோகன் |
| Father/Husband Name | தர்மலிங்கம் |
| Calling/Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 58 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(A1, A2 and A4 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை பெருநகர மாநகராட்சியில் விழிப்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2016ம் வருடம் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது அப்போது என்னுடன் பணியாற்றிய திரு.திருநாவுக்கரசு, காவல் ஆய்வாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையின் அடிப்படையில் வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குண்டலப்பள்ளி பஞ்சாயத்தில் உள்ள கோக்கனூர் கிராமத்தில் பொதுமக்கள் குடிநீர்

விநியோகத்திற்காக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலம் புதிய போர்வேல் அமைத்து அதில் மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கும் பணி 2013–14 ம் ஆண்டு பொது நிதியில் ரூ.2,00,000/–க்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. ஆனால் புதிய போர்வேல் போடாமல் அங்கிருந்த பழைய போர்வேல் கை பம்பை எடுத்துவிட்டு புதியதாக போர்வேல் போட்டதாக பொய் கணக்கு எழுதியதாக தெரிய வந்தது. மேலும், குண்டலப்பள்ளி கிராமத்தில் உள்ள இரட்சை தெருவில் 2011–2012 ஆண்டு தாய் திட்டத்தில் ரூ.1,32,200/– சிமெண்ட் சாலை போடப்பட்டதாக கணக்கு காண்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவருடைய விசாரணியல் இரட்சை தெருவில் எந்த சிமெண்ட சாலையும் போடப்படவில்லை என்பது விரிவான விசாரணையில் தெரிய வந்ததின் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக செல்வபாபு, வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.சுரேஷ்பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.அன்பரசன், வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.ராஜேந்திரன் ஒன்றிய பொறியாளர் மற்றும் திரு.விக்டர் அமிர்தராஜ், உதவி செயற்பொறியாளர் ஆகியோர்களுக்கு தொடர்பு உள்ளது என்று தெரிய வந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்திற்கு திரு.திருநாவுக்கரசு ஆய்வாளர் அறிக்கை அனுப்பி வைத்தார். அந்த அறிக்கையில் மேற்படி குற்றச்சாட்டு குறித்து முகாந்திரம் இருந்தமையால் ஊழல் தடுப்பு ஆணையரின் கடித எண் 950/VC1/2015–1, நாள் 16.03.2015 மேற்படி அலுவலர்கள் மீது சட்டப்படி வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/2015, சட்டபிரிவு 120 (b), 167, 409, 467, 468, 471, 477–A இ.த.ச மற்றும் 13(2) உ/இ 13(1), 13(1)(d) of PC Act 1988 ன் கீழ் வழக்கு பதிவு

செய்து புலன் விசாரணைக்காக என்னிடம் கோப்பை ஒப்படைத்தார். நான் வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்டு கடந்த 10.03.2016 அன்று குண்டலப்பள்ளி ஊராட்சியில் நடைபெற்ற முறைகேடு நடந்த இடத்தினை அடையாளம் காட்ட வாட்டார வளர்ச்சி அலுவலர் லியோபால் நிர்மல்குமார், பேரணாம்பட்டு ஒன்றிய உதவி பொறியாளர் திரு.குகன் மற்றும் குண்டலப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் முரளி ஆகியோர்களுடன் சென்று விசாரணை மேற்கொண்டேன்.

அப்போது கோக்கனூர் கிராமத்தில் 2012-2013 ஆண்டில் பொது நிதியில் ரூ.2,00,000/- செலவில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார், சின்டெக்ஸ் டேங்க் ஆகியவை பொறுத்தாமல் அங்கு ஏற்கனவே இருந்த கை பம்பை எடுத்துவிட்டு அதில் மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் பொறுத்தியதாக அங்குள்ள பொதுமக்கள் தெரிவித்தார்கள். மேலும், பேரணாம்பட்டு ஒன்றி பொறியாளர் திரு.குகன் அவர்களால் மேற்படி ஆழ்துளை கிணற்றை போர்வேல் எரக்சன் வண்டியின் மூலம் அளந்து பார்த்தபோது அந்த ஆழ்துளை கிணறு ஆழம் சுமார் 84 மீட்டர் மட்டுமே இருந்தது.

ஆனால் M book 173.8 மீட்டர் ஆழம் போடப்பட்டிருந்ததாக பதியப்பட்டிருந்தது. அதேபோல் குண்டலபள்ளி கிராமத்தில் இரட்சை தெருவில் 2011-2012ம் ஆண்டு தாய் திட்டத்தில் ரூ.1,31,200/- மதிப்பில் சிமெண்ட் சாலை போட்டதாக கணக்கு காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக குண்டலப்பள்ளி கிராம மக்களிடம் விசாரணை செய்ததில் அங்கு சிமெண்ட் சாலை புதியதாக எதுவும போடவில்லை என்று தெரிவித்தார்கள்.

அலுவலக பதிவேட்டிலும் இரட்சை தெருவில் சிமெண்ட் சாலை போட்டதற்காக பணம் எடுத்துள்ளதாக இருந்தது. மேற்படி குண்டலபள்ளி இரட்சை தெருவில் சிமெண்ட் சாலை போட கோரப்பட்ட டெண்டரில் ஒப்பந்ததாரர் முனுசாமியும், பாஸ்கர்ராஜ் பெயரில் முனுசாமியே டெண்டர் போட்டதாக விசாரணையில் தெரிய வந்தது.

மேலும், அப்போதைய வட்டார வளரச்சி அலுவலர் செல்வபாபு ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் கிடைக்க அவருக்கு சாதகமாக செயல்பட்டார் என விசாரணையில் தெரிய வந்தது. அந்த பணிக்கு பேரணாம்பட்டு ஒன்றிய பொறியாளர் திரு.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர் திரு.விக்டர் அமிர்தராஜ் பணி செய்யாமலேயே பணி செய்ததாக M Book ல் பதிவு செய்துள்ளனர்.

மேலும் 10.03.2016 அன்று கோக்கனூர் கிராமத்தில் ஆழ்துளை கிணற்றை அளந்தது சம்பந்தமாக நான் ஒரு செயல்முறை ஆணையை தயாரித்தேன். அந்த செயல்முறை ஆணையில் நானும், உதவி பொறியாளர் குகன், குண்டலப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் கையொப்பம் செய்தோம்.

(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.17 18:55:17 +0530